**கவனிக்க** - 12.09.2025 ஆந் திகதிய 2454 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2455 - 2025 සැප්තැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2025.09.19

2455 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 736 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, செத்தெம்பர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

735 – B82721 - 5403 (2025/09)

# மாகாண சபை அறிவித்தல்கள்

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொண்ட பிரதேச சபை சட்டம்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கம் கொண்ட மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவு உடன் வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 24 ஆவது பிரிவில் மற்றும் 223 ஆவது பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் ஏ.ஏ. சீ.ஜே. ராஜரத்ன என்ற என் மூலம் அமைக்கப்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் தீர்மானம் இதன் மூலம் வெளியிடப்படுகிறது.

ஏ. ஏ. சீ.ஜே. ராஜரத்ன,
சப்பிரகமுவ மாகாண ஆளுநர்.

ஆளுநர் அலுவலகம்,
புதிய நகரம்,
இரத்தினபுரி,
2025, ஓகத்து 22.

**தீர்மானம்**

சப்பிரகமுவ மாகாணத்தில் அமைந்துள்ள பிரதேச சபை மூலம் நடாத்தப்பட்டு வருகின்ற பாதையில் மற்றும் ஒடுங்கிய பாதையில் நிலையான புள்ளிகள் மற்றும் வரம்பு புள்ளிகள் குறியிடுதலும், திட்டங்களை உருவாக்க வேண்டிய நடவடிக்கைகளை திட்டமிடலும், அதன் பெயர்ப் பட்டியலை காட்டும் விளம்பரங்களை வெளியிடும் நடவடிக்கைகளுக்காக நடைமுறை வழங்குவதற்கான உத்தரவுகளின் தொடர் 2023.01.24 ஆந் திகதிய 2316/20 ஆம் இலக்கம் கொண்ட அதி விசேட வர்த்தமான பத்திரிகை மூலம் விளம்பரப்படுத்தி வழங்கப்பட்ட ஒரு வருட காலத்தில் பிரதேச சபை சட்டத்தில் 24 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவில் மற்றும் 223 ஆம் பிரிவில் கிடைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி, அதன் பிரதேச சபை சட்டத்தின் 24 ஆவது பிரிவின் கீழ் பணியை செய்வதற்கு 2024.01.24 ஆம் திகதி முதல் இருபத்திநான்கு மாதங்களுக்கு கூடுதலான காலத்திற்காக சப்பிரகமுவ மாகாணத்தில் பிரதேச சபைக்கு இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகிறது.

09-197

---

**சப்பிரகமுவ மாகாண சபை**

சப்பிரகமுவ மாகாண சபையின் கௌரவ ஆளுநர் அவர்களின் அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க கொண்ட மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் வாசிக்க வேண்டிய (267 ஆவது அதிகாரம் கொண்ட) களியாட்ட வரி கட்டளை சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) வது துணை பிரிவின் வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி கஹவத்தை பிரதேச சபை மூலம் அனுமதித்த கீழ்க் குறிப்பிடப்படும் முடிவுகள் அதன் பிரிவின் (2) ஆவது துணைப் பிரிவின் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர் ஏ.ஏ.சீ. ஜே.ராஜரத்ன என்ற என் மூலம் அனுமதிக்கிறேன் என்று இதன் மூலம் அறிவிக்கிறேன்.

ஏ.ஏ.சீ.ஜே.ராஜரத்ன,
சப்பிரகமுவ மாகாணத்தின் ஆளுநர்.

மாகாண சபை அலுவலகம்,
சப்பிரகமுவ,
2025, ஓகத்து 22.

**தீர்மானம்**

1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டம் (267 அதிகாரம்) அமைவாக களியாட்ட வரி கட்டளை சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) வது துணை பிரிவுடன் வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 9(3) பிரிவின் படி கஹவத்தை பிரதேச சபையின் செயலாளர் ஆகிய எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி கஹவத்தை பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட வளாகங்களில் களியாட்ட வரி கீழ்க் குறிபிட்டுள்ளவாறு அறவிடப்பட வேண்டும் என 2025.03.26 ஆம் திகதி செயலாளர் தீர்மான இல. 03 இன் செயலாளர் மற்றும் அதிகாரங்கள், கடமைகளை செயற்படுத்தும் அதிகாரி என்ற வகையில் நான் முடிவு செய்கிறேன்.

1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க களியாட்ட வரி கட்டளைச் சட்டம் (267 அதிகாரம்) அமைவாக களியாட்ட வரி கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) வது துணை பிரிவுடன் வாசிக்க வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கொண்ட பிரதேச சபை சட்டத்தின் 9(3) பிரிவின் படி கஹவத்தை பிரதேச சபையின் செயலாளர் ஆகிய எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி கஹவத்தை பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்கு உட்பட்ட வளாகங்களில் நடாத்தி செல்லப்படும் அதன் கட்டளை சட்டத்தில் விபரித்துள்ள ஒரு களியாட்ட நிகழ்ச்சிற்கு உட்பிரவேசிக்க அறவிடப்படும் நுழைவுச்சீட்டில் பெறுமதியில் 15% (நூற்றுக்கு பதினைந்து) சமான வரி விதித்து அறவிடப்பட வேண்டும் எனவும், இந்த தீர்மானம் வர்தமானியில் வெளியிட்ட மாதத்திற்கு அடுத்த மாத முதலாம் திகதி முதல் அதை செயல்படுத்த வேண்டும் எனவும் நான் முடிவு செய்கிறேன்.

09-198

---

**மத்திய மாகாண போக்குவரத்துத் திணைக்களம்**

தகுதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக தகுதிவாய்ந்த வாகனத் திருத்தகங்களை (கராஜ்) பதிவு செய்தல் - 2026

மத்திய மாகாணத்தினுள் பதிவு செய்துள்ள அனைத்து வர்த்தக வாகனங்களுக்காக 2026 ஆம் ஆண்டிற்கான தகுதிச் சான்றிதழ் வழங்குவதன் பொருட்டு வியாபாரமொன்றாக பதிவு செய்யப்பட்டுள்ள மற்றும் குறித்த வரி செலுத்தப்படுகின்றது என்பதற்கான சாட்சிகள் சமர்பிக்க முடியுமான வாகனத் திருத்தகங்களின் உரிமையாளர்களிடமிருந்து மற்றும் இலங்கைப் போக்குவத்துச் சபையின் கீழுள்ள டிப்போக்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மத்திய மாகாணத்தினுள் அமைந்துள்ள வாகன திருத்தகங்களிடமிருந்து (கராஜ்) மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வாகனத் திருத்தகங்கள் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கீழுள்ள டிப்போக்களுக்கு 2025 ஆம் ஆண்டிற்கான தகுதிச் சான்றிதழ்களை விநியோகிப்பதற்காக வழங்கப்பட்ட அதிகாரம் 2025.12.31 ஆந் திகதியன்று முடிவுறுகின்றமையால், 2026 ஆம் ஆண்டிற்காக மீண்டும் பதிவு செய்தல் அவசியமாகும்.

01. விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் :

I. வசதிகள்

I.1 20 அடி நீளம், 2 1/2 அடி அகலம் மற்றும் 4 1/2 அடி ஆழமான வாகனம் சோதனையிடும் கிடங்கு அல்லது அதற்கு சமமான வசதிகளைக் கொண்ட சோதனையிடும் மேடை அல்லது தூக்குக் கருவி (lift)

I.2 தடுப்புச் சோதனையிடும் உபகரணம்

I.3 பிரதான விளக்கினை சோதனையிடும் உபகரணம்

I.4 வாகனத்தின் கீழ் பகுதி, சக்கரத் திருப்பி, உந்துகல இயக்காழி, தடுப்புக் கருவி (பிரேக்), கம்பி வடங்கள் (கேபிள்) மற்றும் சிதைந்த பாகங்கள் என்பவற்றை சோதனையிடுவதற்காக பயன்படுத்தப்படும் திருப்புளி (ஸ்குரு), திருகிமுடுக்கும் கருவி (ஸ்பேனர்கள்), சுத்தியல் போன்ற இயந்திரக் கருவிகள்.

II. சேவைக் குழாம்

வாகனத்தினை சோதனையிடுவதற்கு மற்றும் தகுதிச் சான்றிதழினை சான்றுப்படுத்துவதற்கான, சான்றுபடுத்தும் அலுவலர்களாக பின்வரும் தகுதிகளைக் கொண்ட நபர்கள் வாகனத் திருத்தகங்களில் பணியில் அமர்த்தி இருத்தல் வேண்டும்.

அ. மோட்டார் வாகன இயந்திர பொறியியல் விஞ்ஞானம் தொடர்கான தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ் அல்லது கனிஷ்ட தொழில்நுட்ப வியலாளர் சான்றிதழ் பெற்று மோட்டார் வாகன பொறியியில் துறையில் ஐந்து (05) வருட அனுபவம் கொண்டிருத்தல்.

அல்லது

ஆ. மொரட்டுவ இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் மோட்டார் வாகன இயக்கவியல் தொடர்பான நான்கு வருட கற்கை நெறினையினைப் பூர்த்தி செய்து அதில் சித்தியடைந்திருத்தல் அல்லது அதற்குச் சமமான வேறு தகைமையுடன் மோட்டார் வாகனப் பொறியியல் துறையில் எட்டு (08) வருட அனுபவம் கொண்டிருத்தல்.

இ. சான்றுபடுத்தும் அலுவலர்களாக விண்ணப்பிப்பவர்கள் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

02. விண்ணப்பப்படிவத்துடன் பின்வரும் ஆவணங்களைச் சமர்பித்தல் வேண்டும்.
(தகைமைகளைப் பரீட்சிக்கும் போது உரிய ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.)

அ. சான்றுபடுத்தும் அலுவலர்களாக விண்ணப்பிப்பவரின் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள்

ஆ. மீள் செலுத்தப்படாத வைப்புத் தொகையான ரூபா 2000.00 இனை "இலங்கை வங்கி, இல. 33965, போக்குவரத்து ஆணையாளர், மத்திய மாகாணம்" என்ற கணக்கிலக்கத்திற்கு வரவு வைத்து பெறப்படும் வங்கிப் பற்றுச்சீட்டு.

இ. பரிசோதனை அதிகாரிக்கு அணுகக்கூடிய வகையில் குறித்த வாகன திருத்தகம் அமைந்துள்ள அமைவிடத்தினை சரியாக குறிப்பிட்டு நகரின் மையத்திலிருந்து அவ்விடத்தினை அணுகுவதற்கான பாதை வரைபடம் (பாதையின் விபரம் சுருக்கமாக குறிப்பிடவும்).

ஈ. சான்றுபடுத்தும் அலுவலர்களாக விண்ணப்பிப்பவரின் கனரக வாகனங்களை ஓட்டுவதற்கான செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி.

உ. வணிகப் பெயர் பதிவு மற்றும் வருவாய் வரி செலுத்தும் சான்றிதழ்களின் பிரதிகள்.

03. வாகன வருவாய் உரிமம் வழங்குவது தொடர்பிலான eRL 2.0 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாகன வருவாய் உரிமம் வழங்குகையில் பயன்பாட்டு மென்பொருளினூடாக நடாத்தப்பட்ட சோதனைகளின் விபரங்கள் மற்றும் புகைப்படங்கள் பதிவேற்றம் செய்யப்படவுள்ளதால் திறன் தொலைபேசி (Smart Phone) ஒன்று தேவைப்படுகின்றது. ஆகையால் 2026 ஆம் ஆண்டில் தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்காக வாகனத் திருத்தகங்களைப் பதிவு செய்கையில் திறன் தொலைபேசி (Smart Phone) வைத்திருப்பது கட்டாய அம்சமாக கருதப்படுகின்றது.

04. உரிய விண்ணப்பப்படிவத்தினை அலுவலக வேலை நாட்களில் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். (உங்களினால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்).

05. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தகுதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்காக வாகனத் திருத்தகங்களைப் பதிவு செய்தல் - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிட்டு போக்குவரத்து ஆணையாளர், போக்குவரத்துத் திணைக்களம், இலக்கம் 104, யடிநுவர வீதி, கண்டி என்ற முகவரிக்கு 2025, ஒற்றோபர் 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட மாட்டாது.

ஐ. எஸ். ரத்நாயக்க,
போக்குவரத்து ஆணையாளர்,
போக்குவரத்துத் திணைக்களம்,
மத்திய மாகாணம்

மத்திய மாகாண போக்குவரத்துத் திணைக்களம்,
இல. 104, யடிநுவர வீதி,
கண்டி,
2025, செத்தெம்பர் 04.

09-203